மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ம் நாள் திங்கட்கிழமை

இ.மஎண்.04/2023
உள்
அசல் வழக்கு எண்.64/2022
--------

1. சுப்பையா (எ) முத்துராஜ்
2. நாச்சியார்
3. அழகரக்கம்மாள்
4. சாந்தி
5. வசுமதி
6. செந்தில்நாதன்
7. முருகராஜ்
8. மகாலிங்கம் ... மனுதாரர்கள்/3 ம் நபர்கள்

/எதிர்/

கே.சண்முக வடிவம்மாள் ... எதிர்மனுதாரர்/வாதி

1. செ.சண்முகராஜ்
2. ச.சுவர்ணாம்பிகை
3. கே.வீரசின்னம்மாள்
4. கே.ஜெகன்நாத பெருமாள்
5. வட்டாட்சியர், சாத்தூர்
6. மாவட்ட ஆட்சியர், விருதுநகர் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 01.12.2023 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 29.01.2024 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/3 ம் நபர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.A.விஸ்வநாத் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.D.பாஸ்கரன் அவர்கள் ஆஜராகியும், 5 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள தரப்பில் எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள்

தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10 (2)ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், இறந்துபோன சுப்புத்தாயின் 2ம் நிலை வாரிசான மனுதாரர்கள்/3ம் நபர்களான நாச்சியார், அழகரக்கம்மாள், சாந்தி, வசுமதி, செந்தில்நாதன், முருகராஜ், மகாலிங்கம் ஆகியோரை அசல் வழக்கில் 7 முதல் 14 பிரதிவாதிகளாக சேர்த்துக்கொண்டு வழக்கு நடத்த அனுமதித்து உத்தரவிடக்கோரி 07.11.2023ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்கள்/3ம் நபர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்</u>**:–

இறந்துபோன வாதியின் சகோதரியான சுப்புத்தாய் என்பவரின் கணவர் பெயர் திம்மு ரெட்டியார் ஆகும். மேற்படி திம்மு ரெட்டியார் சுப்புத்தாய்க்கு முன்பே இறந்துவிட்டார். மேற்படி சுப்பத்தாய் என்பவர் வாரிசுகள் ஏதுமின்றி கடந்த 07.06.2021ம் தேதி இறந்துவிட்டார். மேற்படி இறந்துபோன சுப்புத்தாய்க்கு நேரடியான வாரிசுகள் இல்லை என்பதால் இந்திய வாரிசுரிமைச்சட்டப்படி 2ம் நிலை வாரிசான அசல் வழக்கில் உள்ள 1 , 2 மற்றும் 4ம் பிரதிவாதிகள் மற்றும் மனுவில் கண்ட மனுதாரர்கள்/3 ம் நபர்கள் 2ம் நிலை வாரிசுகளாவார்கள். அவர்கள் வழக்கில் சேர்க்கப்படாமல் உள்ளதால் மேற்படி மனுதாரர்கள்/3ம் நபர் வழக்கில் அவசியமான கட்சிக்காரர்களாவர். மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள்/3ம் நபர்களை சேர்க்காவிடில் அசல் வழக்கானது அவசியமான கட்சிக்காரர்களை சேர்க்காத காரணத்தினால் பாதிக்கப்படும். எனவே, இறந்துபோன சுப்புத்தாயின் 2ம் நிலை வாரிசான மனுதாரர்கள்/3ம் நபர்களான நாச்சியார், அழகரக்கம்மாள், சாந்தி, வசுமதி, செந்தில்நாதன், முருகராஜ், மகாலிங்கம் ஆகியோரை அசல் வழக்கில் 7 முதல் 14 பிரதிவாதிகளாக சேர்த்துக்கொண்டு வழக்கு நடத்த அனுமதித்து உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:–**

மனுவில் வியக்தமாய் ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஏனைய சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவைகள் மற்றும் கற்பனையானவைகள் ஆகும். மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். உண்மையில், இறந்துபோன சுப்புத்தாய்க்கு இந்து வாரிசுரிமைச்சட்டத்தின்படி எதிர்மனுதாரர்/வாதியே ஒரே 2ம் நிலை வாரிசாவார். மேற்படி 7 முதல் 14 மனுதாரர்கள் இறந்துபோன திம்முரெட்டியாருக்கு இரண்டாம்நிலை வாரிசுதாரர்கள் ஆவார்கள். மேற்படி தாவா வழக்கானது சுப்புத்தாயின் வாரிசுகளை நிர்ணயம் செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இறந்துபோன சுப்புத்தாய்க்கு நேரடி வாரிசுகள் இல்லாத காரணத்தினால் மேற்படி எதிர்மனுதாரர்/வாதியே சட்டப்படியான 2ம் நிலை வாரிசுதாரர் ஆவார். எனவே, தாவா மனுவானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேலும், மனுதாரர்கள்/3ம் நபர்கள் தாவா வழக்கில் அவசியமான கட்சிக்காரர்கள் அல்ல. எனவே, மனுதாரர்கள்/3ம் நபர்கள் தாக்கல் செய்துள்ள மனுவினை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) **எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:–**

மனுவில் கண்ட சங்கதிகள் சிலவற்றை தவிர மற்ற சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவைகள் என்று மறுக்கப்படுகிறது. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுவானது எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். மனுவில் திம்மு ரெட்டியார் என்பவர் சுப்புத்தாய்க்கு முன்பே இறந்துவிட்டார் என்பதால் திம்மு ரெட்டியாருக்குரிய வாரிசுகள் சுப்புத்தாயின் வாரிசுகள் என்கிற நிலைக்கு வரமாட்டார்கள். மேலும், அசல் வழக்கில் கண்ட பிரதிவாதிகளுக்கும், மனுதாரருக்கும் ஒரே வழக்கறிஞர் ஆஜராகியுள்ள நிலையில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் அவசிய கட்சிகள் குறித்து எந்த விளக்கமும் தெரிவிக்கவில்லை. மனுதாரர்கள் தேவையற்ற கட்சிக்காரர்கள் ஆவார்கள். எனவே, மனுதாரர்/3ம் நபர்

தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

7) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

8) **<u>தீர்வு</u>**:–

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் இறந்துபோன சுப்புத்தாயின் 2ம் நிலை வாரிசான மனுதாரர்கள்/3ம் நபர்களான நாச்சியார், அழகரக்கம்மாள், சாந்தி, வசுமதி, செந்தில்நாதன், முருகராஜ், மகாலிங்கம் ஆகியோரை அசல் வழக்கில் 7 முதல் 14 பிரதிவாதிகளாக சேர்த்துக்கொண்டு வழக்கு நடத்த அனுமதித்து உத்தரவிடக்கோரி 07.11.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். ஒரு வழக்கைப் பொறுத்து ஆட்சேபணைதாரர் யாருக்கேனும், ஆட்சேபணை இருந்து, அவர்களுக்கு அந்த வழக்கில் சம்பந்தம் ஏதேனும் இருப்பின் அவரையும் அந்த வழக்கில் தரப்பினராக சேர்த்து அவர்கள் தரப்பையும் கேட்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். இம்மனுவினையும் மனுதாரர்கள் இறந்துபோன சுப்புத்தாய்க்கு நேரடியான வாரிசுகள் இல்லை என்பதால் இந்திய வாரிசுரிமைச்சட்டப்படி 2ம் நிலை வாரிசான அசல் வழக்கில் உள்ள 1,2 மற்றும் 4 பிரதிவாதிகள் மற்றும் மனுதாரர்கள் இரண்டாம்நிலை வாரிசுகள் ஆவார்கள் என்றும், எனவே தங்களையும்

இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கக்கோரி தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்களால் மனுவில் சொல்லியுள்ள விபரங்களைப் பொறுத்து வழக்கு விசாரணையின்போது மட்டுமே தீர்மானிக்க முடியும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, இறந்துபோன சுப்புத்தாயின் 2ம் நிலை வாரிசான மனுதாரர்கள்/3ம் நபர்களான நாச்சியார், அழகரக்கம்மாள், சாந்தி, வசுமதி, செந்தில்நாதன், முருகராஜ், மகாலிங்கம் ஆகியோரை அசல் வழக்கில் 7 முதல் 14 பிரதிவாதிகளாக சேர்த்துக்கொண்டு வழக்கு நடத்த அனுமதித்து உத்தரவிடக்கோரி 07.11.2023ம் தேதி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்கள்/3 ம் நபர்கள்  தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.